Regd. No. M. 1530

# BALAVINODINI

OR

## THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. IV] April 1922 [No. 4

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

3C
LL,9C ᵐ211,N16
N22·4·4
186452

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருடசந்தா தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ரூ. 2 0 0 |
| தனி சஞ்சிகை .. | ... விலை | ரூ. 0 2 6 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் கட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக்கொள்வதால் அணா மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ... | ரூபா. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ... | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ... | ,, | 3—0—0 |

---

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

[illegible] - 600 008
[illegible]



(2) கூர்மாவதாரம்.

சென்னை-600 008

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922ஞு ஏப்ரல்மீ | பகுதி 4

### கூர்மாவதாரம்.

ஒரு காலத்தில் துர்வாசர் என்கிற முனிவர் லோக மாதாவாகிய லக்ஷ்மிதேவியைச் சேவிப்பதற்காக வைகுந்த லோகத்தை நோக்கிச் சென்றார்; வழியில் ஒரு வித்தியாதர ஸ்திரீயை (தேவ ஸ்திரீயை)க் கண்டார். அந்தஸ்திரீயின் கையில் புஷ்பமாலை யொன்றிருந்தது. அதில் துளஸீ தளமும் கலந்து தொடுத்திருந்தது. அவள் முனிவரைக் கண்டதும் பக்தியோடு பணிந்தாள். அப்பொழுது முனிவர், அந்த ஸ்திரீயைப்பார்த்து, "அம்மணி! நீ எங்

18648

கிருந்து வருகிருய் ?" என்று கேட்டார். தேவஸ்திரீ, "நான் வைகுந்தலோகம் போய் வருகிறேன். அங்கே ஸ்ரீமகா லக்ஷ்மியைச் சேவித்தேன். தேவியார் இந்தப் பூமாலையாகிய பிரசாதத்தை அன்போடு எனக்குக் கொடுத் தருளினர்" என்ருள். இதைக் கேட்டதும் முனிவர், "அப்படியானல் நீ மகாபரிசுத்தமுடைய உத்தமி. ஆத லின் நீ வணங்கத் தக்கவள்" என்று கூறி அந்தத் தேவஸ்திரீயை வணங்கினர். உடனே அந்த ஸ்திரீ தன் கையிலிருந்த மாலையை அவருக்குக் கொடுத்து விடை பெற்றுச் சென்ருள்.

ஸ்ரீமகா லக்ஷ்மியின் பிரசாதத்தைப் பெற்ற முனி வர் பரமானந்த மடைந்தார். உடனே ஆநந்தக் கூத்தாடி னர். மகாலக்ஷ்மியை மனமாரத் துதித்தார்; பிறகு ஸ்வர்க்கலோகம் போனர். ஸ்வர்க்க லோகத்துக்கு அதி பதியாகிய தேவேந்திரன் அப்பொழுது வெள்ளையானை யின்மீது ஏறிக்கொண்டு நகர்வலம் வந்துகொண் டிருந் தான். அந்த வைபவத்தைத் தூருவாசர் பார்த்து, "இவன் மேகங்களுக்கு அதிபதி. மேகங்களாலே உல கங்களெல்லாம் க்ஷேமமடை கின்றன. அவரவர் தொழில் கள் குறைவற நடந்து வருகின்றன. மகரிஷிகளின் தவ மும் சரிவர நடக்கின்றது" என்றெண்ணி மகிழ்ந்து அவன் பக்கம் போய் அவனுக்கு, மகாலக்ஷ்மியின் பிரசாத மாகிய திருமாலையைக் கொடுத்து ஆசீர்வாதம் செய்தார்.

தெய்வ ஸ்திரீகள் பலர் இந்திரனுக்கு முன்னும் பின் னுமாக நின்று ஆடல் பாடல்கள் புரிகின்ற படியால் அவன் அந்த விநோதத்தில் மனஞ் செலுத்தியவனயிருந்

தான். முனிவரை அவன் சரியாய்க் கவனியாமலே அன்பு கூர்ந்து அவர்கொடுத்த மாலையை மட்டும் தன் செங்கோலா லேற்றுத் தன் யானையினுடைய கழுத்திலே போட்டான். அதனை அந்தயானை தன் துதிக்கையினு லெடுத்துக் காலின் கீழிட்டுச் சின்னுபின்னம் செய்தது; இது மகரிஷிக்கு ஆருக்கோபத்தை யுண்டாக்கிற்று. அந்த நிமிஷமே அவர் கண்களிரண்டும் செக்கச் செவே லென்று சிவந்து தீப்பொறிகளை வீசின. முனிவர் தேவேந்திரனை உற்று நோக்கி, "அடே சண்டாளா! என்ன காரியமடா செய்தாய்? எந்தத் தேவியாருடைய திருவருளால் சகல லோக சராசரங்களும் தழைத்தோங்கி வளர்கின்றனவோ அந்தத் தேவியாருடைய அரிய பிரசாதத்தை உன்னுடைய செல்வச் செருக்கால் நீ அவமதித்த படியால் அந்தத்தேவியாரின் அநுக்கிரஹத்தை இழந்து நீ வருந்தக்கடவாய்'? என்று சாபங் கொடுத்தார்.

இப்படி சபித்த மாத்திரத்தில் அவனுடைய செல்வங்களெல்லாம் திருப்பாற் கடலிலே மறைந்தன. உடனே தேவலோகத்தில் இருள் சூழ்ந்தது. இதை யறிந்த இந்திரன் மனவருத்த மடைந்து பரிதவித்தான்; பிரமதேவனிடம் போய் அவரைச் சரணமடைந்தான்; பிறகு மும்மூர்திகளுடைய ஆலோசனையின்படி திருப்பாற் கடலைக் கடையத் தொடங்கினுன்; அதற்கு மந்தரமலையை மத்தாகக் கொண்டான்; வாசுகி யென்னும் பிரமாண்டமான பாம்பை இழுத்துக்கடையும் கயிறுகத் தொடுத்தான். தேவர்கள் ஒருபுறமும் அசுரர்கள் ஒருபுறமுமாக இருந்து கடலைக் கடைந்தார்கள். மறைந்த பொருள்களெல்லாம் படிப்படியே வெளிவந்து அவை போய்ச் சேர வேண்டிய இடம் போயின.

இவ்வாறு திருப்பாற்கடலைக் கடையும் காலத்தில் மந்தரமலை ஒரு நிலையிலில்லாமல் அமிழத் தொடங்கியது. அந்த வேளையில் தேவர்க ளெல்லோரும் ஸ்ரீமகா விஷ்ணுவினிடம் சென்று அவரைத் துதித்துத் தங்களை யீடேற்றும்படி வேண்டினார்கள்.

பகவான் அவர்களுடைய வேண்டுகோளுக் கிரங்கிக் கூர்மாவதாரங் கொண்டு மந்தரமலையைக் கடலில் அமிழாதபடி ஏந்திநின்று தேவர்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்து காப்பாற்றி யருளினார். இதுதான் கூர்மாவதார வரலாறு.

---

கூர்மம்=ஆமை.

---

## சில நியாயவாதிக ளியல்பு

சரிகைத்தலைப்பாகை தான் வைப்பர் வெண்மைமிகு
 சலவைமல் லிடையுடுப்பார்
சட்டைபல மாட்டுவார் சட்டபுத்தக மோடு
 சாரட்டிலேறி வருவார்
தெரியடாவென உண்மை பேசுவார் கட்சிகள்
 செயித்தோ மனந்த மென்பார்
சின்னப்பணங்கூட விட்டிடார் பீசின் மேற்
 செலவு மெங்கென்று கேட்பார்
சரியான விவகாரமேனுமது பாழ்செய்துன்
 தலைவிதிச் செயலிதென்பார்
சரீரம் வெயர்க்கலா வெல்லாம் புரட்டியே
 சண்டையும் போடு மென்பார்
மரம் வறண்டிளதேனும் நாருரிப்பார் ஞாய
 வாதிகட்குள மிளகுமோ
வரைராஜ குமரிமடி மீது விளையாடல்புரி
 மணிகொண்ட வடிவேலனே.

(1) இடை=இடுப்பு, (2) வண்மை=திறமை, அநந்தம்=அநேகம், (4) லா எல்லாம்=சட்டமெல்லாம்,=லா இது திசைச் சொல்.

(வடிவேலர் சதகம்)

சென்னை-600 008
186452

# விநோதை

(76-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பர் வீட்டு வேலைக்காரி அம்பல சோமாசியை நோக்கி "நான் கூறிய பாடலுக்குப் பொருள் சொல்லு கிறேன்—கேளும்" என்று கூறுகிருள்.—

"அப் பாடலின் முடிவான பொருள் 'விருட்டி' என்பதாம். அதனை எரு முட்டை, எரிமுட்டை, விறட்டி, எரிவிறட்டி என்றும் சொல்லுவர். அது வட்ட வடிவான சந்திரனைப் போலிருக்கும்; நெருப்பைக் கண்டால் தாவிக் கொள்ளும் (வன்னிக்கொடி—அக்கினிக் கொழுந்து); சாணமாயிருந்து உருண்டையாகப் பிசையப்பெற்று உரிய இடத்தில் தட்டப் படும்போது அப்படித் தட்டும் பெண்டு களின் கையிலிருந்து கொஞ்சநேரம் கூத்தாடும்; (நெருப் பிற்) சுட்டபோது சாம்பலாய் 'வெந்த சாம்பல் விரை யெனப் பூசியே' என்னும் ஆன்ருேர் வாக்கின்படி விபூதி யாக மதிக்கப்பெற்று 'அரகரா' என்கிற சப்தத்துடன் சிவ நேசச் செல்வர்களால் நெற்றித் தலத்தில் அணியப்படும்; (இவ்வாறு செய்வதைக் கிராமதேவதைகளின் ஆலயத்தில் பொங்கலிடும் இடத்திலுள்ள சாம்பலை அவ்வழியே செல் பவரிற் பலர் எடுத்தணிவதால் அறிந்திருக்கிருேம்) ஏ!

* 73-ம் பக்கம்—4-5-வரி-ல் 'அடங்கியவன்' என்றிருப் பதை 'அடங்கியவள்' என்றும், 76-ம் பக்கம்- 5-வது வரியில் 'வள்ளிக் கொடி' என்றிருப்பதை 'வன்னிக்கொடி என்றும் படிக்கவும். தவறு எத்தன்மையானவரையும் வஞ்சிக்கும். அதற் கிடந்தரா திருக்கக் கவனிப்பது தான் மாந்தரின் பெருமை.

சோமாசியாரே! இந்தக் கருத்தை நீர் வெளியிடுமென்று உமக்கு நான் ஒரு நாள் கெடுவிட்டேன். நீரோ மிரள மிரள விழிக்கிறீர். நீர் தானா கவிச்சக்ரவர்த்தி யாரிடம் கனத்த வாதஞ் செய்ய வந்தீர். பரிதாபம்! பரிதாபம்!! நல்லது நம்மிருவருக்கும் நடந்த பேச்சு வேறு எவரேனும் அறிந்தால் உம்மை ஏளனஞ் செய்வார்கள். அதற்குள் நீர் வந்தவழியையே உமது சொந்தவழியாக எண்ணி வாய் திறக்காம லோடிப் போம். எதிரியின் பலமும், கால பலமுந் தன்பலமுங் கருதாமல் போர் புரியவந்தால் அது பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதையாய் முடியும்" என்று சொல்லித்தன் வேலையி லிருந்தாள். சோமாசியும் போய் விட்டான். நிற்க,

"**வித்துவான்**" என்ற பட்டம் இந்தக் காலத்தில் நாம் எல்லோருமே எளிதிற் பெற்றுக் கொள்ளலாம். அல்லது வைத்துக் கொள்ளலாம். பாடசாலைகளில் பிள்ளைகளுக்குத் தெளிவு பெறத் தமிழைக் கற்றுக்கொடுக்க வேண்டு மென்கிற நிபந்தனை அமுலிலில்லை; ஹெட் மாஸ்டர் இஷ்டம். புஸ்தகத்தில் இருப்பதைப் பிள்ளைகள் மனப்பாடம் செய்தாற் போதும்; செய்யாவிட்டாலும் ஒன்றும் முழுகிப் போகாது. தமிழென்ன முக்கிய பாடமா? அதைக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. அதற்கென்று ஏற்பட்ட 'மார்க்கை' (Mark) வேறு பாடங்களால் நிரப்பிக் கொள்ளலாம். ஹெட்மாஸ்டரின் பூரண தயவிருந்தால் '**தமிழ்ப் பண்டிதர்**' என்னும் பட்டம்

"தக்காரும் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்ற லிலராவர்—அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு."

வரி, இறை இல்லாமலே தழைத்து விடும். ஆனால் இப்போது ஆங்கிலத்தோடு கொஞ்சம் தமிழ் தெரிந்தவர்க்கு இப்பட்டம் தட்டுத் தடையின்றிக் கிடைத்து விடுகின்றது. நாளடைவில் "மஹா மஹோ பாத்தியாயர்" பட்டத்தையும் பெற்று விடலாம்—எதற்கும் அதிகாரிகளின் அபிமானந் தான் அஸ்திவாரம்—அவர்கள், தமிழ்ப் பண்டிதராக வருபவர்கள் Discipline என்கிற சிக்ஷிப்பின் திறத்தை நடத்த வல்லவரா என்பது ஒன்றைத் தான் கவனிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். அந்தத் திறமை யற்றவர் தமிழில் உண்மையாகவே பாண்டித்தியம் பெற்றிருந்த போதிலும் பாடசாலைகளில் **தமிழ்ப்பண்டிதர்** என்னும் பட்டத்துக்கு அருகராக மாட்டார்கள். ஆனால் வேறிடங்களில் அப்பட்டத்தை மேள தாளத்துடன் செலுத்த எள்ளளவும் தடையில்லை. இராஜாங்கத் தாரும் தடுக்க மாட்டார்கள். இலையும் பழுப்பும் எங்கு முண்டு.

இந்த வித்வ பட்டத்தை நாமிப்போது வெகு சுலபத்திலடையக் கூடியவர்களா யிருப்பது பற்றி நாம் சந்தோஷப்பட வேண்டியதே. ஆனால் அடக்கம் என்பதை மட்டும் நாம் இழந்துவிடக் கூடாது—அதை இழந்தவர் அல்லது மறந்தவர் **வேதாந்த நிபுணர்** ஆயினும், '**தர்க்க இலக்கண போத காசிரியர்**' ஆயினும், மற்றும் நீண்ட பயங்கரமான பட்டத்தைக் கொண்டவராயினும், மதிப் படைய மாட்டார்கள். ஆகவே வைதிகத்துக்கும் லௌகிகத்துக்கும் ஆதாரமான கல்வியை அவமதியாமல், தக்க இடத்திற் பயின்று, பயின்றபடி அடங்கி நடக்க ஒவ்வொருவரும் முற்படவேண்டும்—கல்வி கற்று அடக்கமுற்றவரே கண்ணுடைய வராய் எவ்விடத்தும், எக்காலத்தும் சிறப்

படைவர்—அவர்களே **வித்வக் காய்ச்சல், குலக்காய்ச்சல், தனக் காய்ச்சல்,** என்னும் முக் குறும்பையும் ஒழிக்கத் தக்கவராவர். அவர்களே பொதுநலப் பிரியத்துக் குரியராவர்—அவர்களே தேச க்ஷேமத்தின் முன்னேற்றத்திற்கும் ஆதாரமாவர். அவர்களே ஜனங்களுக்குச் சமயோசிதமான இதோப தேசங்களைச் செய்வதற்கு யோக்கிய ராவர்.

"எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து"

என்று மேலோர் கூறுகின்றனர்.

அதாவது பலவகைப்பட்ட கல்வியானது எந்த அளவைக் கொண்டிருப்பினும், தக்க இடங் கண்டு அக்கல்வியை அவ்விடத்தில் கற்க வேண்டும்; அப்படி ஆராய்ந்து கற்றல் கூடாதபோது, அது பயனற்று விடும்; கூடிய போது பிறர்க்கு விளக்கும் வல்லமையும் உடன் கூட வேண்டும்; அந்த வல்லமை கூடாவிடின் ஒரு பயனு மேற்

உலகத்தில் பலர் ஒருவனைப் பழித்தால் பலமற்ற ஒருசிறுவனும் அவனைப் பழிக்கத் தொடங்குவான். நூறுபேர்கள் சேர்ந்து ஒரு திருடனைப் பிடித்தால் வழியே போகிறவர் வருகிறவர் கூட அவனை அடிக்கத் துணிகிறார்கள். முதலில் திருடனைப் பிடித்தவனே வீரனுவா னல்லது பின்பு அவனை அடிப்பவன் வீரனுவானு? அதுபோல் எந்தக் காரியத்தையும் முதலில் கண்டு பிடித்துச் செய்பவன் புத்திசாலியே யல்லாமல் அவனைப் பின்பற்றும் மற்றவர்கள் புத்திசாலிக ளாகார்கள். அப்படி நடப்பதெல்லாம் செத்தபாம்பை யடிப்பது போலாம்.

இது இப்படியிருப்பினும் கல்வி விஷயத்தில் பெரியோர்களைப் பின்பற்றுவதே சரியாகும். மாணவனுடைய வித்வத் தன்மையினுல் குருவின் பெருமை விளங்குகிற தன்றோ ?

படாது: கூடினல் பொன்னுல் செய்த பூவானது மணம் பெற்றது போலாகும்—என்பதாம்.

இவ்வுபதேசத்தை வித்தியார்த்திகள் மறக்கலாகாது. மறந்தால், சோமாசி எப்படி வெட்கமடைந்து, "ஐயோ! நான் கல்வியின் பயனுகிய அடக்கத்தை அநாதரித்தபடியா லன்றோ, எருமுட்டை தட்டும் ஒரு பெட்டை மகளால் தலை மொட்டை யடிக்கப் பெற்றேன். 'அறிவோர்க்கழகு கற்றுணர்ந் தடங்கல்' என்பதை இனி அவமதியாமல் கடைப்பிடித் தொழுகி மேன்மை பெற வேண்டும்" என்று நிச்சயித்துக்கொண்டானே அப்படி எவரிடத்திலாயினும் முதலில் கஷ்டப்பட்டுப் பிறகு திருந்த வேண்டிவரும். இந்த அலங்கோலத்திற்கு இடந் தரலாகாது.

வித்தையி னருமை இவ்வாறிருக்கின்றது. பெறுதற் கரியவை இன்னவை யென்று பேசவந்த சீவகசிந்தாமணி சொல்வதைக் கொஞ்சங் கேளுங்கள்.—

(வரும்) ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன்பேட்டை.

---

## நீதிகள்

(1) பெரியவர்கள் எங்கே யிருந்தாலும் அவர்கள் முன்பு உடம்பின்மீது போர்வையைப் போர்த்துக்கொண்டு போவது கூடாது; இறுமாந்து நடப்பது கூடாது; இறுமாந்து நிற்பது கூடாது. இரண்டு கால்களையும் சேர்த்திணைத்தலுங் கூடாது. இவ்வாறு நடந்தால் அவமானமும் அவமதிப்பு முண்டாகும்.

(2) பெரியவர்கள் கூடியிருக்கும் சபையில் ஒருவித அங்க சேஷ்டையும் செய்வது கூடாது. அழுக்கானவைகளைையும் உடன் கொண்டு குறுக்கே நடப்பது கூடாது. கடுமையான சொற்களைப் பேசுவது கூடாது.

## வாழ்வுஞ்சிலகாலம் தாழ்வுஞ் சிலகாலம்

ஒருவண்ணான் வீட்டில் ஓர் ஆடும் கழுதையுமிருந் தன. வண்ணான் கழுதையைக் காலைத்தளைந்து தினந்தோறும் வெளியே முடுக்கிவிடுவான். அது வெளியே போய் வயிறுர மேய்ந்துவந்ததும் அதைப்பிடித்து அதன் மேல் துணிமூட்டைகளை ஏற்றிக்கொண்டு போவான். வீட்டில் அதற்கென்று ஒரு தீனியும் போடுவதில்லை. ஆனால் ஆட்டுக்குத் தினந்தோறும் புல் கொண்டுவந்து போட்டு நிழலிலே கட்டித் தண்ணீர்வைத்துப் பாதுகாத்துவந்தான். வண்ணானுக்குச் சாவகாசமுண்டான சில சமயம், ஆட்டைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு தடவிக்கொடுத்து வருவான்.

இப்படி பராமரித்து வந்தமையால் ஆடு நன்றாய்க் கொழுத்திருந்தது. அது ஒரு சமயம் கழுதையைப் பார்த்து நகைத்து, "நான் புண்ணியம் செய்திருக்கிறேன். ஆகையினால் எனக்கு இந்த வீட்டில் நல்ல உணவு, நிழலில் படுக்கை, மரியாதை எல்லாம் நடக்கின்றன. நீ பாபஞ் செய்திருக்கிறாய் என்பது நிச்சயம்! அதனாலேதான் உன்னைத் தீனிக்காக வெளியே ஓட்டிவிடுகிறார்கள். ஓட்டி விடுவதிலும் காலைத் தளைந்துவிடுவது ஒரு கஷ்டம்! பெரியபரிதாபமிது'' என்றது.

கழுதை, "நண்ப! நீ சொல்வதுண்மைதான். ஆயினும் சுகமும் துக்கமும் மாறிமாறிவரும் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே பேசுகிறாய்! கொஞ்ச நாள்

பொறுத்துக்கொண்டிரு. அப்பொழுது இந்த நியாயம் உனக்குத் தெரியும்" என்று கூறிற்று.

பிறகு கொஞ்சநாளைக்கெல்லாம் பிடாரிகோவில் திருவிழாவந்தது. அப்பொழுது இந்த ஆட்டை வெட்டுவதற்காக வண்ணான் பிடித்துக்கொண்டு போனான். ஆடு விழித்தது. கழுதை அதைப்பார்த்து, "நண்பா, என் விழிக்கிறாய்? நீ முன் சுகமநுபவித்தாயல்லவா? இப்போது கஷ்டம் வந்திருக்கிறது. துக்கப்படுகிறாய். முன் நான் கஷ்டப்பட்டேன். இப்போது உன்னுடைய இந்தக் கதியைப் பார்த்ததும் அது நீங்கி எனக்குச் சுகமுண்டாகிறது" என்றது. ஆடு பதிற்பேச முடியாமல் கண்ணில் நீர் பெருக்கிற்று.

குழந்தைகளே! நல்ல சுகத்திலிருக்கும்போது இறுமாந்து பிறரை இகழ்வதுகூடாது. உலக வாழ்வில் சுகம் கொஞ்சநாளைக்கிருக்கும். பிறகு துக்கம் வரும். பின் துக்கம்போய் சுகமுண்டாகும். இப்படியேதான் ஆறிடும் மடுவும் மேடும்போல் இந்த வாழ்வு தாழ்வுறும் சிலசமயம், சில சமயம் உயரும்.

"குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்—
அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசரோடிருந்தர சாளினு மாளுவர்"

என்று பெரியோர் கூறியிருப்பதை நீங்கள் படித்ததில்லையா? ஆதலின் எப்போதும் கீழ்ப்படிந்து நடப்பதே நல்லதாம்.

---

## முகம்மது நபியவர்களின் உபதேசம்.

(1) வயதுமுதிர்ந்த பெற்றோர்க்குப் பணிவிடை செய்யாதவன் ஒருநாளும் நற்கதியடைய மாட்டான்.

(2) முத்தியென்பது தாயாரின் திருவடியிலே யிருக்கிறது.

(3) வயது சென்ற பெரியோரைக் கண்யப்படுத்தும் சிறுவர்க்குப் பின்னால் அவர்களுடைய கிழவயதில் அவர்களைக்கண்யப்படுத்த அவர்களுக்கு அநேகரை ஆண்டவர் ஏற்படுத்துவார்.

(4) தந்தையின் சந்தோஷமே அல்லாவின் சந்தோஷம்! தந்தையின் வெறுப்பே அல்லாவின் வெறுப்பு.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

உலகத்திலுள்ள புண்ய நதிகளிலொன்றாகிய கிருஷ்ணாநதி தீரத்தில் கரவீர புரம் என்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்தில் ஒரு பிராமணனிருந்தான். அவனுக்கு ஒரு மனைவி. அவள் பொல்லாத குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருந்தாள். பிராமணன் பரமசாது. தெய்வபக்தியிற்சிறந்தவன். அவன் அவளுடைய கைப்பதுமையாக ஆடிவந்தான். என்ன செய்வான் பாவம். அந்த பிராமணனுக்கு ஒரு பிள்ளை. பிள்ளையும் நல்லவன். அவனுக்கு அந்தப் பிராமணன் சகூ என்னும் பெயர் கொண்ட ஒரு பெண்ணைத் தேடி மணஞ்செய்வித்தான். மருமகள் நல்ல அழகும் அழகுக்கேற்ற அருமையான குணமும் வாய்ந்து திருமகளின் அவதாரமோ இவள் என்று ஊரார் புகழும்படி விளங்கினாள். ஸ்ரீஹரியினிடத்தில் பரமபக்தி வாய்ந்தவளாய் அவருடைய திருநாமங்களை எப்போதும் சொல்லிக் கொண்டும் அவர் திரு உருவத்தைத் தியானித்துக் கொண்டுமிருப்பாள். அவளுடைய கை, வேலையிலும் மனம் பகவானிடத்திலும் எப்போதுமிருக்கும். இந்த உத்தம குணங் கண்டு ஊரார் அவளைப் புகழ்வார்கள். ஆனால் கொடியவ

ளாகிய மாமிக்கு மாத்திரம் அது பிடிப்பதில்லை. அவளுக்குத் தெய்வம், புண்ணியம், தருமம், தானம், தயை, தாட்சண்யம் இவை செவியிலேகூடப் படுவது கூடாது. பேயே பெண்ணாகப் பிறந்திருக்கிறது என்று சொல்லத் தக்கவள். இந்த மகா பாபியினிடம் சகூபாய்வந்து அகப்பட்டுக் கொள்ளும்படியாய் நேரிட்டது. அப்படிவர அவள் எந்தப் பிறப்பிலே செய்த பாபமோ தெரியவில்லை.

மாமியென்கிற கொடுஞ்சூரி இரவும் பகலும் சகூபாயிடம் இரக்கமில்லாமல் வேலைவாங்கி வந்தாள்; மருமகள் சற்று அயர்ந்து உட்கார்ந்தால் சள் என்று விழுவாள்; கிருஷ்ணா, கோவிந்தா, மாதவா, கேசவா, நாராயணா— என்று பகவானுடைய நாமங்களைச் சொன்னால் தன் செவி இரண்டையும் இறுகப் பொத்திக் கொண்டு, "உன் பக்தி பாழ்த்துப் போக! எப்போதும் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் வீட்டிழவை யெல்லாம் யாரெடுத்துத் தொலைப்பது" என்பாள்; சகூபாய் தன் புருஷனோடு சற்றுச் சந்தோஷமாய்ப் பேசிக்கொண் டிருந்தால் பிறகு அதைப் பழித்துக் காட்டி ஏசி இகழ்ந்து வேலைவாங்குவாள். சகூபாயின் புருஷன் நல்லவனே தவிர தாயார் இப்படித் தொந்தரவு செய்வதைப் பற்றிக் கவனிப்பது கிடையாது. அவனுக்கு அவ்வளவு புத்தி போதாது. ஆனால் ஊரில் அநேகருக்கு சகூபாயை அவள் மாமி மிகவும் தொந்தரவு செய்கின்றாள் என்பது தெரிந்து அவர்களெல்லாரும் அவளைக் கண்டபடி பேசி ஏசி வந்தனர். அவள் மானத்தை விட்டவள். ஆனபடியினால் அவள் அதற்கெல்லாம் அஞ்சவில்லை.

சகூபாய், மாமியார் சொல்லாதபேச்சைச் சொன்ன

லும் பதிற் பேசமாட்டாள். அந்தப் பாவி பசிதணியப் போஜன மிடாள். இரக்கமின்றி வேலைமட்டும் வாங்குவாள். பொத்தலுள்ளபானை கொடுத்து ஜலந்திரட்டிவரச் சொல்லுவாள். சகூபாய் இவற்றை யெல்லாம் பொறுத்துக் கொண்டு எப்போதும் பகவத்தியானமே செய்து கொண்டிருப்பாள். சில சமயம் "ஐயோ! என் பாப வசத்தால் தெய்வ விசுவாசமில்லாத இந்த வீட்டிலேவந்து வாழ்க்கைப்பட்டுக் கஷ்டப் படுகிறேன். இனி இந்த மாயையிலே கலக்க வொட்டாமல் என்னைப் பகவான் காப்பாற்றுவார்" என்று எண்ணுவாள். எந்த வேளையிலும் எந்தக் கொடுமையிலும் பகவானையே தியானிப்பாள். சில சமயம் யாரேனும் பெண் பிள்ளைகள் அவளிடம் வந்து, "நீ யேன் இந்தப் பாவிகள் வீட்டிலிருந்து கஷ்டப்படுகிறாய்? உன் தாயார் வீட்டிற்குப் போகக் கூடாதா?" என்று கேட்பார்கள். அவர்களை நோக்கி, சகூபாய், "எனக்குத் தாய் ஸ்ரீ ருக்மிணிதேவி, தந்தை கிருஷ்ணபகவான்! அவர்களை நம்பி யிருக்கிறேன். அவர்கள் சீக்கிரம் வந்து காப்பாற்றுவார்கள். அவர்களுக்கு மக்கள் அளவிறந்த பேர்களாகையினால் காலதாமதம் செய்கின்றனர்" என்று கூறுவாள்.

இப்படி யிருந்து வருகையில் அவ்வூருக்குச் சிலபாகவதர்கள் வந்தார்கள். அவர்க ளெல்லோரும் பண்டரிபுரம் போகிறவர்களாகையினால் பகவானுடைய கீர்த்தனைகளைப் பாடி பஜனைசெய்துகொண்டே வந்தார்கள். இதை யறிந்த சகூபாய் தானும் பண்டரிபுரம் போகவிரும்பி, வீட்டை விட்டு ஒருவரையு மறியாமல் வெளிப்பட்டுப் பாகவதர்களிடம் போய் அவர்களைப் பணிந்து, "பாகவத சிரோ

மணிகளே! இந்த ஏழையையும் பண்டரி புரத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு அவர்களோடு சேர்ந்து பஜனைசெய்யத் தொடங்கினாள். சகூபாய் இங்கிப்படியிருப்பதைக்கண்ட ஒருத்தி அவள் வீட்டிற்குப்போய் அவள் மாமியைக்கண்டு, "உன்மருமகள் பண்டரிபுரம் போகிறாள். பாகவதர்களோடு சேர்ந்துவிட்டாள்" என்று கூறினாள். மாமியார் இதைக்கேட்டதும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தன் மகனிடம் போய்ச் சொன்னாள். மகன் கோபங்கொண்டு விரைந்தோடி பாகவத கோஷ்டியிலிருந்த சகூபாயைத் தலைமயிரைப்பிடித்துக் கதறக் கதற இழுத்து வீட்டிற்குக் கொண்டுவந்து ஒரு தூணில் வைத்துக் கட்டிவிட்டு "இவளுக்குச் சோறு தண்ணீர் ஒன்றுங் கொடுக்கவேண்டாம்" என்று வீட்டில் தன் தாய்க்குச் சொல்லிவிட்டான்.

அவள், வெறும்வாயை மெல்லுகிறவள்; கொஞ்சம் அவலகப்பட்டால் விடுவாளா? விடமாட்டாளல்லவா? தன் மகன் சொன்னபடி சோறுதண்ணீர் கொடாமலிருந்ததோடு நில்லாமல் வாயில் வந்தபடி திட்டி, "உன்முகத்திற்குப் பஜனைவேறு? உன் ஜன்மத்திற்குப் பண்டரிபுர யாத்திரைவேறு?" என்றும் இகழ்ந்துபேசினாள்.

இப்படி மாமியாரும் கணவனும் தொந்தரவு செய்வதை யெல்லாம் சகூபாய் பொறுத்துக் கொண்டு எப்போதும் பகவானையே தியானித்துக் கொண்டிருந்தாள்; பகவானை நோக்கி, "எனக்குத் தந்தையும் தாயும் சுற்றமும் நீயே! எனக்கு இரங்குவார் உன்னையன்றி ஒருவருமில்லை. உன்னையே நம்பி யிருக்கிறேன்" என்று கூறி

அடிக்கடி துதிப்பாள். இவ்வாறு இரண்டு மூன்று நாள் கழிந்ததும் ஒருநாள் பகவான் ஒரு மாதைப் போல் வேஷம் பூண்டு சகூபாயின் முன்னே தோன்றி, "உன்னை இப்பொழுது கட்டவிழ்த்து விடுகிறேன். நீ பாகவத கோஷ்டியுடன் சேர்ந்து பண்டரிபுரம் போய்விட்டுவா. உன்னை இந்த வேளையில் ஒருவரும் கண்டு பிடிக்கமாட்டார்கள். உன்னுடைய பரிதாப நிலையைக் கண்டு உன்னை நான் விடுவிக்க வந்தேன்! ஓடிப்போ" என்று கூறிக் கட்டவிழ்த்துவிட்டார். கட்டிலிருந்து விடுபட்டதும் சகூபாய் அவ்வீட்டி லிருந்து தைரியமாய் வெளிப்பட்டு பகவானை தியானித்துக் கொண்டே பாகவதர்க ளிருக்குமிடம் போய்ச் சேர்ந்தாள். பாகவதர்க ளெல்லோரும் அன்றையதினம் விடியற் காலையில் பண்டரி புரத்துக்குப் புறப்பட்டமையால் சகூபாயும் ஒருகஷ்ட மில்லாமல் அவர்களோடு புறப்பட்டுப் பண்டரிபுரம் போய்ச் சேர்ந்தாள்.

சகூபாயை இவ்வாறு அனுப்பிய பகவான், உடனே சகூபாயைப் போல் வடிவமெடுத்துக் கொண்டு தாமே அந்தத்தூணில் கட்டுண்டார். மறுநாள் பொழுது விடிந்தது. சகூபாயிக்கு நடந்த மரியாதைகளை யெல்லாம் வழக்கம்போல் மாமியார் பகவானுக்கு நடத்தினாள். பகவான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு சகூபாயைப் போலவே நடித்து வந்தார். இப்படி இரண்டுவார மாய் விட்டது. இரண்டுவாரமாய் சகூபாய் அன்னந் தண்ணீரில்லாமல் இருப்பதைப்பற்றிப் புருஷன் வியப்படைந்து "இரண்டு வாரமாய்ப் பட்டினிகிடக்கும் இவளுக்கு இனி உயிர்போனாலும் போய்விடும். அப்படி நேர்ந்துவிட்டால் நான் மனைவியை இழக்க நேரிடும். பெருந்தொகை செல

வழித்தல்லவா இவளைக் கல்யாணம் செய்திருக்கிறேன். இவள் மரணமடைந்தா லடையட்டும்; வேறு விவாகம் செய்துகொள்வோமென்றால் அதற்கும் கையில் பணமில்லையே" என்று கருதித் தன் தாயாரிடம் சொல்லிச் சகூபாயைக் கட்டவிழ்த்து விடும்படி செய்து அவளுக்கு நல்லவார்த்தை சொல்லி வீட்டுவேலைகளைக் கிரமப்படி செய்துகொண்டிருக்கச் சொன்னான்.

பகவானாகிய சகூபாய், அதற்குடன்பட்டதுபோல் நடித்து, உடனே போய் ஸ்நானஞ்செய்து மடி செய்து கொண்டு, வீட்டுவேலைகளையெல்லாம் செய்யத் தொடங்கினார்; மாமியாரிடம் சோற்றையுண்டு அவள் கட்டளைப்படி சகல வேலைகளையும் முகங்கோணாமல் செய்துவந்தார்; நாள்தோறும் தேவாமிருதமாகச் சமையல்செய்து வைத்தார். சகூபாயினுடைய புருஷனிடம் சகூபாயைப் போலவே யிருந்துவந்தார். ஆகா! என்ன ஆச்சரியமிது! தம்மிடம் அன்புபூண்ட ஒரு பக்த சிகாமணியின்பொருட்டுப் பகவான் இப்படியெல்லாம் சிரமப்பட்டிருக்கிறார் என்று அறிந்தால் எந்த மூடன் பகவத் பக்தியிலீடுபடாமலிருப்பான்? ஆகா! பகவானுடைய திருவருளை என்னென்று சொல்வது? இப்படிப்பட்ட சகாயம் யாருக்குக் கிடைக்கும்? மகா பாக்கியம் செய்தவர்களுக்கல்லாமல் மற்றவர்களுக்குக் கிடைக்குமா?

பகவான் இங்கே இப்படி யிருக்கிறார். பண்டரிபுரம் போன சகூபாய் அங்கே போனதும் அங்கிருந்த பக்த கோடிகளையும் பாண்டுரங்கருடைய திவ்ய ஸந்நிதானத்தையும் கண்டு பரமானந்த மடைந்து பகவானைப் பணிந்து, "ஸ்வாமி! எனக்கு இனி ஒன்றும் வேண்டாம். உன்

பாதார விந்த தரிசனமிருந்தால் போதும். இனி நான் காவீரபுரம் போக மாட்டேன். உன்னுடைய ஸந்நிதியிலே தினந்தோறும் தொழுது கொண்டு கிடப்பேன்! உன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்" என்று உறுதி செய்து கொண்டு நாடோறும் சந்திரபாகா நதியிலே மூழ்குவதும் பகவானைத் தொழுவதுமே தொழிலாகக் கொண்டிருந்தாள். தன்னைக் கட்டிலிருந்து விடுவித்த மாதையும் மறவாம லிருந்தாள்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் சகூபாய் மரண மடைந்து விட்டாள். ஆகா என்ன கஷ்டமிது! தெய்வச் செயலை யார் தடுப்பது! அந்தப் பிணத்தைப் பிராம்மணனொருவன் சந்திரபாகா நதிக்குக் கொண்டுபோகும்படி செய்து தகனஞ் செய்துவிட்டுத் தன் ஊர் போய் விட்டான். காவீரபுரத்தில் சகூபாயாக இருக்கும் பகவான் இனி எப்படி அங்கிருந்து விடுபடுவது என்கிற சிந்தனை ஜகதம்பிகையாகிய ஸ்ரீ ருக்மிணி தேவிக்கு உண்டாயது. உண்டான உடன், தேவி, சுடுகாடுசென்று சகூபாயின் எலும்பைச் சேர்த்துவைத்து அவளை உயிர்ப்பித்தாள். சகூபாய் உயிர்பெற்றதும் வியப்படைந்து தன் முன்னிருக்கும் தேவியைப் பணிந்து நின்றாள். தேவி, "சகூபாய், நீ இனிக் காவீரபுரம் போகவேண்டும். உன்னுடைய முன் சரீரம் போய் இப்பொழுது வேறு சரீரம் உனக்குக் கிடைத்துவிட்டபடியால், நீ முன்செய்த ஆணை முடிந்தது" என்று கட்டளையிட்டு மறைந்தாள்.

பிறகு சகூபாய் பரம ஆச்சரியமும் பரமபக்தியும் மேலிட்டவளாய் அங்கிருந்து யாத்திரிகர்களோடு புறப்பட்டுக் காவீரபுரம் வந்து சேர்ந்தாள். இவள் அவ்வூர்

நதிக்கருகே வந்துகொண்டிருக்கிறாள். அப்பொழுது அங்கு ஜலந்திரட்டவந்த பகவானாகிய சகூபாய், உடனே முன் சகூபாய்க்குத் தரிசனந்தந்த மாதைப்போலுருவங் கொண்டு எதிர்ப்பட்டு, "அம்மா சகூபாய், பாண்டுரங்கனுடைய தரிசனம் செய்தாயா? சந்தோஷமடைந்தாயா? நானும் சந்தோஷமடைந்தேன்! இந்தா இந்தக் குடத்தில் ஜலந்திரட்டிக்கொண்டு உன் வீட்டுக்குப் போ" என்று கூறி உடனே மறைந்தார். சகூபாய் இந்த ஆச்சரியத்தைக் கண்டதும் "நம்மை விடுவித்ததும், இப்பொழுது இங்கே வந்து நமக்கிவ்வாறு கட்டளையிட்டதும் பகவானே" என்றறிந்து பரமானந்தமடைந்து, ஜலந்திரட்டிக்கொண்டு வீட்டுக்குப்போய் ஒன்று மறியாதவள் போல் மௌனமாக விருந்து வீட்டு வேலை செய்து வந்தாள்.

பண்டரிபுரத்தில் சகூபாயைத் தகனம் செய்த பிராமணன் இப்பொழுது இங்கேவந்து சகூபாயின் புருஷனிடமும் மாமியினிடமும் அங்கு நடந்ததையெல்லாம் சொல்லித் துக்கப்பட்டான். இருவரும் இச்செய்திகேட்டு வியப்படைந்து சகூபாயை அழைத்து விசாரிக்கையில் அவள் ஆதியிலிருந்து நடந்ததையெல்லாம் சொன்னாள். இதைக்கேட்டதும், "பரமாச்சரியம்! பரமாச்சரியம்!" என்று எல்லோரும் கூறிப் பகவானுடைய கருணையைப் பற்றி வியந்துபேசினார்கள். சகூபாய்க்கும் பிராமணருக்கும் மற்றுமங்கிருந்தவர்க்கும் சகூபாய்க்குப் பதிலாக பகவான், மற்றொரு சகூபாயை இங்குத் தங்களுக்குப் பணிசெய்துகொண்டிருக்கும்படி வைத்திருந்ததையும், அந்தச் சகூபாய் வேலைசெய்த விமரிசையையும், தாயா

ரும் பிள்ளையும் கூறி மகிழ்ந்தார்கள். சகூபாய் **"எல்லாம் இறைவன் செயல்"** என்று எண்ணி மகிழ்ந்து பகவானைத் தியானித்தாள். சகூபாயின் புருஷனுக்கும் அவள் மாமிக்கும் இப்பொழுது பகவானிடம் பக்திசெலுத்தும் உத்தமமான மனமுண்டாயது. வந்திருந்த பிராமணனும் பகவானுடைய பக்த வாத்ஸல்யமுணர்ந்து பரமாச்சரியமடைந்து, சகூபாயை நமஸ்கரித்துத் தன் ஊர் போய்ச்சேர்ந்தான். அன்று முதல் சகூபாயை அவள் புருஷனும் மாமியாரும் தம் வீட்டுத் தெய்வம்போல் பாவித்து மிகவும் அன்பாய் நடத்திவந்தார்கள்.

**இதனால், கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்கள்** என்பதும், மக்களாய்ப் பிறந்தவர்கள் தெய்வ பக்தி யுடையவர்களாயிருந்தாலன்றி நல்ல வாழ்வையடைய வழியில்லை என்பதும் அறியலானோம். ஆகையினால், நீங்கள் என்றும் கடவுளை நம்பி அன்போடு அவரை வழிபடுவீர்களாக !

---

பழமொழிகள்

இசையும் வசையும் அவரவர் செய்கையினாலேயே
(பெருமையுஞ் சிறுமையும் தான்றர வருமே) (1)

எண்ணிச்செய்பவன் செட்டி எண்ணமற் செய்பவன் மட்டி
(எண்ணித்துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவமென்ப திழுக்கு) (2)

எட்டிக்குப் பால் வார்த்தாலும் தித்திப்புண்டாகுமா ?
(உரைத்தாலும் பேதைக்குத் தோன்றா துணர்வு) (3)

# புத்திமானே பலவான்.

டில்லிபாதுஷாவாகிய அக்பர் சக்கரவர்த்தியினிடம் பிர்பால் என்னும் பிரதான மந்திரி ஒருவர் இருந்தார். இவரிடம் அக்பருக்கு அதிக அன்புண்டு. இதனால் மற்ற மந்திரிகள் இவரிடம் பொறாமையும், அரசனிடம் அதிருப்தியும் கொண்டார்கள். ஒருநாள் மற்ற மந்திரிகள் அரசனிடம் "தாங்கள், பிர்பால் மகாபுத்திசாலியென்று புகழ்ந்துகொள்ளுகிறீர்களே; நாங்கள் சில கேள்விகள் கேட்கிறோம். பிர்பாலை விடையளிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றார்கள்.

அரசன் "அவ்விதமேயாகுக" என்று சொல்லி பிர்பால் சபைக்கு வந்ததும் மற்ற மந்திரிகளைப்பார்த்து "நீங்கள் சொல்லியபடி கேள்விகள் கேட்கலாம்" என்று உத்தரவிட்டார். அவர்கள் உடனே "இன்று பிர்பால் அகப்பட்டுக்கொண்டு விழிக்கப்போகிறான்"? என்று சந்தோஷப்பட்டுக்கொண்டு

(1) பூமியின் மத்தியபாகம் எது ?

(2) ஆகாயத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன ?

(3) உலகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களின் சரியான சங்கை எவ்வளவு ?—என்று இவ்வாறு மூன்று கேள்விகள் கேட்டார்கள்.

அரசன் பிர்பாலைப்பார்த்து "இவ்வினுக்களுக்கு விடையளிக்கவேண்டும்" என்றான்.

பீர்பால் சற்று யோசித்து "இது இவர்களுடைய விஷமமாகத்தா னிருக்கவேண்டும்; இவர்களைச் சரி யானபடி அவமானப்படுத்தவேண்டும்" என்று கருதி விடைகளைத் தீர்மானப்படுத்திக்கொண்டு "பிரபோ, பகர் கின்றேன் சற்றுச் செவி சாய்க்கவேண்டும்" என்றான்.

அரசன், ஆகட்டும்-என்றான்.

பீர்பால்: ஒருகோலைப் பூமியில் ஓரிடத்தில் ஊன்றி "இந்தக்கோல் எந்த இடத்தில் நிற்கிறதோ அந்த இடந்தான் பூமியின் மத்தியபாகம். இதில் ஏதாவது சந்தேகமிருந்தால் தாராளமாய் அவர்களை அளந்துபார்த்துக் கொள்ளச் சொல்லலாம்" என்றான். மற்ற மந்திரிகள் "பூமிமுழுதும் அளந்துபார்த்து இவன் சொன்னது தவறென்று எப்படி ருசுப்படுத்துவது" என்றுமயங்கி வெட்கிச் சும்மாவிருந்து விட்டார்கள்.

இரண்டாவது வினாவிற்கு பீர்பால் நன்றாய்க் கொழுத்த செம்மறியாடு ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்தி "பிரபோ, இந்த ஆட்டின்மேல் எத்தனை ரோமங்கள் இருக்கின்றனவோ அத்தனை நட்சத்திரங்கள் ஆகாயத்திலிருக்கின்றன; தேவையானால் அவர்களையே எண்ணிப்பரீக்ஷித்துப் பார்த்துக்கொள்ளச் சொல்லலாம்" என்று சொன்னார். மற்ற மந்திரிகள் திகைத்து "இது ஏதடா வம்பாய் முடிந்தது; இந்த ரோமங்களை யாரால் எண்ணமுடியும்? எண்ணினாலும் ஒன்றுகூட விடாமல் எப்படிச்சரியாய்க் கணக்கெடுப்பது? இவன் வாயில் கோலிட்டது பிழை" என்று எண்ணி வெட்கித்தலை குனிந்தார்கள்.

இரண்டு விடைகளுக்கும் ஆட்சேபனை செய்யமுடி

யாதவராய் மற்ற மந்திரிகள் இருக்கக்கண்ட பீர்பால் சந்தோஷங்கொண்டு அரசனை நோக்கி "அரசே, மூன்றாவது கேள்விக்கும் பதில் அளிக்கவேண்டுமோ?" என்று வெகு விநயமாய்க் கேட்டார்.

மந்திரிகள் இனியும் அவமானமடையப்போகிறோமே என்கிற திகில் மேலிட்டவர்களாய் "வேண்டாம், போதும், போதும்" என்று சொன்னார்கள்.

இருந்தாலும் பீர்பால் என்ன சொல்லுகிறாரென்று அறிய விரும்பி அக்பர் அதற்கும் விடையளிக்கும்படி கேட்டார். பீர்பால் "இது சாமான்யமான காரியமல்ல. இக்கேள்வி கேட்ட மந்திரிகள் எல்லாரும் சேர்ந்து உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தினரை யெல்லாம் கொன்று சவமாக வீழ்த்தினால் பிறகு கணக்கு ஒரே நிமிஷத்தில் சொல்லுகிறேன்" என்றார்.

அரசன் பீர்பாலின் புத்தி சாதுரியத்திற்கு மெச்சி மற்றவர்களைப்பார்த்து "அவர் எப்படியும் புத்திசாலிதான். நீங்கள் அவரைக்கண்டு பொறாமைப்படுவதில் பிரயோசனமில்லை" என்று சொல்லி அனுப்பினார்.

குழந்தைகளே; புத்திசாலிகளிடம் பொறாமை கொள்வதுகூடாது. கொண்டால் இக்கதையில் மற்ற மந்திரிகள் அவமானமடைந்தமாதிரி அவமானமடைய நேரிடும். இதனாலேதான் "**பொய்யும் பொறாமையும் செய்யும் வேந்துன்பம்**" என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்.

## விளையாட்டு வினையாய் முடிந்தது.

ஜெயபுர மென்னும் ஊரில் அவ்வூர்க் கோவிலுக்கருகாமையில் ஒரு பெரிய யானை கட்டியிருந்தது. அதைப்பார்ப்பதற்காக ஒரு நாள் அங்குச் சிலர் கூடியிருந்தார்கள். அவர்கள் அதற்குத் தேங்காய் பழம் முதலியவைகள் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். யானையும் தன் துதிக்கையால் அவைகளை வாங்கி வாங்கித் தின்று கொண்டிருந்தது. அப்போது அவ்விடத்திற்குப் போக்கிலி ஒருவன் வந்தான். வந்ததும் அவன் மனம் ஏதாவது விஷமம் செய்யவேண்டு மென்பதில் சென்றது. போக்கிலிகளுக்கே தீவிர புத்தியுண்டு. மனம் சென்ற மாத்திரத்தில் தலையை யசைத்து "நல்ல யுக்தி. யானைதான் கட்டப்பட்டிருக்கிறதே. நம்மை என்ன செய்யும்" என்று நினைத்துச் சந்தோஷ சித்தனாய்ப் பக்கத்தி லிருக்கும் கடைக்குச்சென்று ஒரு நல்ல வாழைப்பழம் வாங்கி அதில் ஓர் ஊசியைச் செருகி யானையினிடம் வந்து மற்றவர்களைப் போல் இவனும் அந்தப் பழத்தை யானைக்குக் கொடுத்தான். யானையும் வழக்கம்போல் வாங்கி வாயில் போட்டுத் தின்னும்போது பழத்திற்குள் ளிருந்த ஊசி யானையின் நாக்கில் குத்தி விட்டது. யானை ஒரு சப்தம் போட்டது!

பக்கத்திலிருந்தவர்கள் பயந்து நடுங்கினார்கள். போக்கிலியோ சந்தோஷத்துடனிருந்தான். யானை மறுபடியும் மறுபடியும் கதறிற்று. யானை கத்தக்கத்த போக்கிலி விழுந்து விழுந்து சிரித்தான். அவனுக்கு விளையாட்டாயிருப்பது யானைக்கு வினையாயிருந்தது. இதற்குள் யானைப் பாகன் வந்து யானையின் வாயைப் பார்த்தான். அதில் ஊசி குத்திக்கொண் டிருப்பதைக் கண்டு பரிதாபப்பட்டு அதை மெதுவாகப் பிடுங்கி எடுத்தான். யானைப் பாகன் இது எப்படி வந்ததென்று தெரியாமல் பக்கத்திலிருந்தவர்களை அங்கு நடந்ததென்னவென்று கேட்டான். இதற்குள் யானை அந்தப் போக்கிலியிருக்கிற பக்கத்தில் துதிக்கையை ஆட்டி ஆட்டிக் குதித்தது. என்ன செய்யும் பாவம்! கட்டியிருக்கிறதல்லவா? அங்கிருந்தவர்கள் போக்கிலியைக் காட்டி "இவன் ஒரு பழம் கொண்டுவந்து கொடுத்தான். அதைத் தின்றது. உடனே வீரிட்டுக்கத்தியது." என்றார்கள். யானைப்பாகன் போக்கிலியை விசாரிக்க வாயெடுத்தான். போக்கிலி சிரித்துக் கொண்டே ஓடிவிட்டான். பிறகு அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் வந்து கூடினார்கள். அவர்களில் ஒருவன் போக்கிலி பழம் வாங்கியதையும் அதில் ஓர் ஊசியைக் குத்தியதையும் தான் பார்த்ததாகவும், அவன் தான் இப்படி செய்திருக்க வேண்டுமென்றும் சொன்னான்.

யானைப் பாகன் "அவன்தான் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அப்படிஓட நியாயமில்லை" என்று கருதி "அவன் என்றையதினம் யானையின் கண்ணில் படுகிறானோ அன்றையதினமே ஒழிந்தான். யானை கருவைத்தால் விடாது; எத்தனை வருஷமானாலும் சரி.

அவனை விடாது; அவன் தப்பமாட்டான்" என்று சொல்லி யானையைத் தட்டிக் கொடுத்தான்.

ஓடிப்போன போக்கிலியோ தான் பழத்தில் ஊசியைக்குத்தி யானைக்குக் கொடுத்ததையும், யானையின் வாயில் ஊசிகுத்திக் கொண்டதையும், யானை கதறியதையும் தன் நண்பர்களிடம் சொல்லிச் சொல்லி ஸந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தான். இப்படியாக ஏறக்குறைய ஒரு வருஷகாலம் கடந்தது.

ஒரு நாள் யானை நதியில் நீராடிவிட்டுக் கரைக்குவந்தது. அதே சமயத்தில் போக்கிலியும் எதையோபார்த்துக்கொண்டே அப்பக்கம் வந்தான். அவன் யானையைப் பார்க்கவில்லை. யானை அவனைப் பார்த்து விட்டது. வந்துவிட்டது கோபம் யானைக்கு. பக்கத்தி லிருந்தவர்கள் நடுங்கியோடும்படியாக ஒரு பெருத்த சப்தமிட்டு ஒரே தாண்டாய் போக்கிலிமேல் பாய்ந்தது. போக்கிலி

---


## பதிவிரதைப் பாட்டு

### ஆநந்தக் களிப்பு

கர்த்தாவே முதல்தெய்வம்—மானே—பின்பு
பர்த்தாவல் லாலுண்டோ பாக்கியந்—தானே
புருஷனல் வார்த்தை தட்டாதே—மூட்டும்
எருதுபோல் நீ சண்டைக் கிடுப்புக் கட்டாதே
தேகமும் சீவனும்போல—கொண்ட
மாகணவனுடன் வாழ்வது மேலே
கணவனுன்மேற் பகைமூர்க்கம்—செய்யில்
குணமாய்ப்பேசிக் குலாவு நல்மார்க்கம்
கற்புநிலையே சிங்காரம்—அது
தப்பினோழகு சவ அலங்காரம்— (கர்த்தா)

(பொண்மதி மலை)

திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான். தன்னால் ஹிம்ஸிக்கப் பட்ட யானை! என்ன செய்வான். ஒன்றும் தோன்ற வில்லை. திகைத்துப் போய் மரமாய் நின்று விட்டான். யானை துதிக்கையால் அவனை வளைத்துப் பிடித்து ஒரே தூக்காகத் தூக்கித் தன் கொம்பின்மேல் நிறுத்திப் பிறகு



கீழே போட்டுக் காலால் துகைத்து உடல் வேறு சதை வேறாக ரத்தம் பீறிட்டோடச் சின்னாபின்னப் படுத்திக் கொன்று விட்டது. யானை ஜயகோலங் கொண்ட கம்பீர

மான தோற்றத்துடன் பாகன் வரவை எதிர் பார்த்து நின்றது. முந்தியே தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பாகன் யானை தூக்கிக் கிழித்துக் கொன்றவன் பழய போக்கிலி யென்று தெரிந்து ஒருவகைச் சந்தோஷத்துடன் யானையினிடம் வந்து தட்டிக் கொடுத்து அழைத்துக்கொண்டு போனான்.

குழந்தைகளே! பார்த்தீர்களா போக்கிலியின் கதியை. அவன் விளையாட்டாகச் செய்தது வினையாய் முடிந்தது. ஒருபோதும் பிறருக்குத் தீங்கு விளைக்கும் படியான விஷமங்களைச் செய்வது கூடாது. யானை தனக்குப் பிறர் செய்த தீங்கை என்றும் மறவாமல் பழிக்குப் பழி வாங்குங் குணமுடையதல்லவா.

---

## ஆளுக்கொரு குட்டுக்குட்டினால் அடியேன் தலை மொட்டை.

---

ஒரு மகா பண்டிதர் தமது சொந்த ஊரில் பெருமையடையாதிருந்தார். இதைக்கண்ட அப்பண்டிதர் 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று பெரியோர் சொல்லி யிருத்தலினாலே "நாம் அயலூருக்குப் போனால் கனம் பெறலாம்" என்றெண்ணித் தமது ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

வழியில் ஒரு நதியைக் கடந்து செல்லவேண்டியதாயிருந்தது. அந்த நதியில் சில சமயங்களில் ஜலமிருப்பதில்லை. ஆனால் திடீலென்று வெள்ளம் வருவதுண்டு. இது அந்த மகா பண்டிதருக்குத் தெரியாது. ஜலமில்லாதிருக்கவே, அவர் அந்த நதியில் இறங்கிச் சாவகாசமாய் நடந்து வந்தார். முக்கால் நதி கடந்ததும் எங்கிருந்தோ ஜலப்பிரவாகம் பெருகி வந்து விட்டது. அந்த வெள்ளத்தில், பண்டிதர் அகப்பட்டுக்கொண்டு அதன்பிறகே வாய்திறவாமல் போகலுற்றார்.

கரையோரத்தில், பயிரைக் காத்துக்கொண்டிருந்த ஒரு குடியானவன், "ஐயோ! யாரோ ஒரு மனிதனை ஆறு

அடித்துக்கொண்டு போகிறதே" என்று கூச்சலிட்டு, சடக்கென்று நதியிலிறங்கி நீந்திச் சென்று, அப்பண்டி தரை இழுத்துவந்து கரை சேர்த்தான். பண்டிதர் நிதானப்பட்டு, நனைந்த துணிகளை உலரவைத்துக் கட்டிக் கொண்டதும், குடியானவன், அவரை நோக்கி "ஐயா! நீர் எந்த ஊர்? எங்கேபோக உத்தேசித்து இந்த நதியில் இறங்கிவந்தீர்? கூச்சப்படாமல் சொல்லும்; என்னால் ஏதாவது சகாயஞ் செய்யக்கூடுமானால் செய்கிறேன்" என்றான்.

பண்டிதர் அவனை அன்புடன் நோக்கி, "பிராண ரக்ஷகா! நீயே ஆபத்சகாயன். நீ செய்த பேருதவிக்கு நானென்ன பதிலுபகாரஞ் செய்யப்போகிறேன். உனக்குப் பகவான் இகத்துக்கும் பரத்துக்கும் வேண்டிய சகல பாக்கியங்களையும் குறைவறக் கொடுத்து இரக்ஷிப்பாராக. நானொரு மகாபண்டிதன். சகலகலைகளையுங் கற்றுத் தேர்ந்து ஜாண்வயிற்றுக்குத் தாளம் போடுகிறேன். எனக்கு என் சொந்த ஊரில் கௌரவம் ஏற்படாமையால் வெளியே எங்கேயாவது நமது வல்லமையைக் காட்டிக் கனம் பெற்றுவரலாம் என்று இப்படி வந்து விட்டேன். இனி பகவான் எப்படி விடுவாரோ அறியேன்" என்றார்.

"பண்டிதரா? சபாஷ்—ஐயா! மகாபண்டிதரே, என் வயிற்றில் பாலைவார்த்தீர். எங்கள் ஊர் முழுவதும் பண்டிதமயந்தான். எங்களூரிலுள்ள ஒரு சிறு கட்டுத்தரியும் கவிசொல்லும். ஆகிலும் பாதகமில்லை. எனக்கொரு மகனிருக்கிறான்; கொஞ்சம் படித்திருக்கிறான். நீர் நமது ஊரிலேயே இருந்துகொண்டு அவன் நல்வழி அடையும் வித்தையைக் கற்றுக்கொடும், பிறகு பார்க்கலாம்" என்றான் குடியானவன். "மகா பாக்கியம்" என்று ஒத்துக் கொண்ட பண்டிதர், குடியானவனுடைய மகனைக் கூப்பிட்டு, "தம்பி! நீ 'நல்வழி' தெரிந்துகொண்டால் எல்லாம் உனக்கு நல்வழி யாகவே முடியும். நான் கற்றுக் கொடுக்கிறபடி நீ பாடஞ் செய்து வரவேண்டும். சொல்லுகிறேன் கேள்—"

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா"

என்று சொல்லிக் கொடுத்தார். பையன் இந்தப் பாடலை மனப்பாடஞ் செய்து கொண்டிருந்தான். குடியானவன் இதைக் கேள்வி யுற்றதும், "அடே! பையா! போதும். நிறுத்து. வீட்டு இளப்பம் வண்ணனுக்குத் தெரியும் என்பார்கள். நேற்று வந்த பண்டிதர் எப்படிக் கண்டு கொண்டார். முன்பின் யோசியாமல் எடுத்த எடுப்பிலேயே ருசியான பதார்த்தங்களின் மேல் ஆசைப் படுகிறார். நல்லது, நீ நான் சொல்லுகிறபடி பாடஞ் செய்து கொண்டு போய் அவரிடம் ஒப்பி" என்று திட்டப்படுத்தி

"பாலுண்டு தேனில்லை பாகில்லை பருப்புண்டு
மேலு மவையெனக்கு வேண்டியவே—கோலஞ்செய்
பொங்காற்றி லேயடித்துப் போனவனை மீட்டதற்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா"

என்று கற்றுக் கொடுத்தான். பையன் இதை வாத்தியாரிடம் சொல்ல, பண்டிதர், "இதென்ன விபரீதம்! நூலிலுள்ளதைக் கற்றுக் கொடுத்தால் அதை விடுத்துக் குடியானவன் வாயில் வந்ததைப் படிக்கச் சொல்லுகிறானே. நமக்கு இந்த ஊர் தகாது. நாம் நாளையதினமே புறப்பட்டு வேறெங்கேனும் போகவேண்டும்" என்று நிச்சயித்திருந்தார். அன்று இராத்திரி அங்கொரு புராணப் பிரசங்கம் நடந்தது. அதைக் கேட்கப் பண்டிதரும் போனார். பிரசங்கியார் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை. எந்த சாஸ்திரத்திற்கும் பொருந்தியதாகத் தோன்றவுமில்லை. பெருமழை பெய்வது போல் மூச்சுவிடாமல் வாயில் வந்ததை யெல்லாம் வரம்புகடந்து பேசி வந்தார். ஜனங்கள் அவ்வாயைப் பார்த்திருந்தார்களே யல்லது வசனத்தைக் கவனிக்க வில்லை. பண்டிதர் நடுவில் எழுந்து "ஐயா! நீர் எதைப்பற்றி பிரசங்கஞ் செய்கிறீர். ஒன்றும் தெரிய வில்லையே. இப்படியும் ஒரு பிரசங்க முண்டோ?" என்று கேட்டார். பிரசங்கியார் கோபாவேசங் கொண்டு "யாரது?

மூடு வாயை—கதிர் வேலுக்கு எதிர்வே லுண்டோ?'' என்று கூவினர். இதற்குள் அங்கிருந்தவர்கள் பண்டி தரை நோக்கி "யாரையா நீர்? எங்கள் பிரசங்கியார் பரம் பரை யாண்டி, நீரோ பஞ்சத்து ஆண்டி; வீணு யவரிடம் வாய் கொடுத்து வாதனைக் கிடந்தேடிக் கொள்ளுகிறீர். 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை' 'ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம்' 'தட் டிப்பேச ஆளில்லா ஊரில் தம்பி சண்டப்ர சண்டன்' என்னும் பழமொழிகளை நீர் கேட்டது மில்லையா? மூடும் வாயை'' என்று இடித் துரைத்தார்கள். பண்டிதா அவ மதிப்படைந்து, இவனை எப்படியாவது தண்டிக்கவேண் டும் என்றெண்ணி மறுபடியும் எழுந்து நின்றார்.

நின்றவர், "சபையோர்களே! ஒரே ஒரு வார்த்தை சொல்லவேண்டியதா யிருக்கிறது. தயவு செய்து கேட்க வேண்டும். நான் இந்தப் பிரசங்கியாரின் மகத்துவத்தை அறியாமற் போனேன். இப்போது தான் தெரிந்துகொண் டேன். இப்படிப்பட்ட புண்யவான்களிடமிருந்து முக்கிய மான வஸ்து ஒன்றைப் பெறுகிற வர்களுக்குச் சகல பாக் கியங்களும் பெருகு மென்று சாஸ்திரம் கூறுகிறது. எண் ஜாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம். அந்தச் சிரசை அலங்கரித்துக்கொண்டு அதன் மீதிருக்கும் மயிரோ எல் லாவற்றிலும் பிரதானம். அந்த மயிரில் ஒன்றுதான் எனக்குத் தேவை. அதுகொண்டு நான் கடைத் தேறி விடுவேன்'' என்று சொல்லி மிகுந்த பயபக்தி யுடன் பிரசங்கியாரிடம் போய், தலைமயிரிலொன்றை மெதுவாகப் பிடுங்கிக் கொண்டு நமஸ்காரம் செய்து விட்டு நழுவிவிட்டார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சபையோர் ஒருவருக்கொருவர் குசு குசு வென்று பேசத் தொடங்கினர்கள். அவர்களில் ஒருவர் எழுந்து நின்று "நாமோ நமது கைப்பொருளைச் செலவிட்டு இந்தப் பிரசங்கியாரை வைத்துப் பிரசங்காமிர்தத்தை யுட்கொண்டு வருகிறோமே யொழிய, பிரசங்கியாரின் தலைமயிர் விசேஷத்தை அறியாமற்போனோம். எங்கி

ருந்தோ வந்த ஒரு புதுமனிதர் எப்படியோ அந்த மகிமையை உணர்ந்து பணச்செலவில்லாமலே நமது கண்ணெதிரிலேயே ஒரு மயிரை அபகரித்துக்கொண்டு ஆனந்தபரவசராய் அப்பாற் போய்விட்டார். ஏமாந்தவர்கள் நாமே. இன்னும் சும்மா இருந்தால், அது, நமது மூடத்தன்மையை வெளிப்படுத்திவிடும். நாமுங்கடைத்தேற வேண்டாமா? ஆகையால் ஒருவர்பின் ஒருவராக நமது பிரசங்காபரண சிகாமணியாரின் சிகையைத் தரிசித்துச் செல்வோம்'' என்று சொல்லி அவருடைய தலைமயிரிலொன்றைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்- உடனே எல்லோரும் ஒருமிக்க எழுந்து "எனக்கோ—உனக்கோ—நீ முந்தியோ-நான் முந்தியோ?'' என்று ஒருவரோடொருவர் சச்சரவு செய்துகொண்டு பிரசங்கியாரின் குடுமியை யடியோடு பிடித்துக்கொண்டார்கள். குத்துக் குத்தாக மயிரைப் பிடுங்கலானார்கள். பிரசங்கியாருக்கு பாதை பொறுக்க முடியவில்லை. "ஏண்டா நாம் பிரசங்கம் செய்ய வந்தோம். பிராணன் போய்விடும்போலிருக்கிறதே. புதிதாய் வந்தவன் இந்தத் தந்திரத்தால் நம்மைக் கொல்ல ஏற்பாடுசெய்துவிட்டுப் போய்விட்டான். என்ன செய்வேன்? சகிக்கக்கூடவில்லையே'' என்று பயந்து "சபையோர்களே சற்று நிதானியுங்கள். அம்பட்டனை யழைத்து வந்தாவது மயிரை எடுத்துக்கொள்ளுங்கள். உயிர் போகிறது'' என்று கூச்சலிட்டுக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அவன் என்ன கெஞ்சியும் ஒருவரும் அதற்கு இணங்கவில்லை. அவனை அதோ கதியாக்கி இனி அவன் பிரசங்க முகத்தில் விழிக்காதபடி செய்துவிட்டார்கள்.

பண்டிதர் தமது எண்ணம் நிறைவேறியதற்கு ஆனந்தித்து வேறொரு தேசஞ்சென்று சுகமே வாழ்ந்து வந்தார். படிப்புள்ளவர் எவ்வித ஆபத்திலிருந்தும் தப்புவார்கள். அது இல்லாமல் வாய்ப்பந்தலிட வருபவர்கள் துன்பமடைவார்கள். ஆகையால் படிப்பை அவமதியாமல் சிரத்தையோடு கற்கவேண்டும். பிள்ளைகளே! இதை மறவாதீர்கள்.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

186452

# Best Specific for Children.

## Gowri Gorojan Gulikai.

*Best specific for children suffering from cold, throat affection, cough, convulsions, fever and enlargement of the glands.*

This is an effective medicine for unhealthy children suffering from various ailments and is essential for every house with children. They may contract suddenly from rain and cold weather disorders such as chill, cough, throat affection, fever, delirium, vomiting, swoon, convulsions, sleeplessness etc. Stock these pills and avoid all cause for anxiety.

**Price per phial of 50 Pills Re. One.**

## Gowri Bala Rasarnavam.

*An excellent medicine for all sorts of infantile convulsions.*

It is extremely necessary that precautions should be taken against this trouble. Convulsions also some times appear with laryngitis. At such moments smear the body with *Gowri Mrithinjaya Ointment* and give an internal dose of this Rasarnava. Laryngitis may be the result of indigestion, abdominal phthisis, etc. The disease is of many sorts: *i.e.,* dyspepsia indigestion, that arising from fever or poison, internal heat, and many other ailments with various disorders at the outset.

**4 oz Phial Rupee One.**

**1 Oz of Gowri Mrithinjaya ointment Rupee One.**

## Gowri Bala Kavada Ghrit.

*An excellent ghee for enlargement of glands in children.*

This is a special specific for the enlargement of glands. The abdominal glands swell when a child suffers from fever cough, dysentery, etc. There will be no appetite for food and the body will gradually get weak and lean. This enlargement of the glands appears under different names. **4 oz Ghee Rupee One.**

## Gowri Balananda Sanjeevi.

*The Laghium for Indigestion, Diarrhoea in children.*

This is an excellent remedy for children suffering from indigestion, stomach ache, diarrhoea and the like The laghium also removes sleeplessness,

**Laghium to last for 10 days' use Annas Eight.**

---

**GOWRI AYURVEDA VAIDHYA MANDIRAM**

***No. 363. Pycroft's Road, Royapettah, Madras***

# RAMAYANA RAHASYAM

(Revised Third Edn.)

A Characteristic Study of the Ramayana told in easy and elegant style by the Editor of Balavinodini, Varakavi. T. A. Subramanya Bharati. **Price As. 10**

To the Subscribers of Balavinodini **As. 8**

# இராமாயண இரகசியம்

(திருத்தமான மூன்றாம் பதிப்பு.)

இது பாலவிநோதினியின் ஆசிரியர் வரகவி-திரு. அ. சுப்பிரமண்ய பாரதியவர்கள் எழுதியது. இதில் ஸ்ரீராமன் நல்ல பிள்ளையாகவும், பரதன் நல்ல தம்பியாகவும், ஸீதை நல்ல மனைவியாகவும், குகன் நல்ல நண்பனாகவும், மாருதி நல்ல அடிமையாகவும், விபீஷணன் நல்ல பக்தனாகவும் விளங்கிய விசேஷங்களையே அமுத மொழியினால் பிள்ளைகளின் மனத்தில் பசுமரத் தாணிபோல் பதியுமாறு விளக்கியுள்ளார். ஆண் பெண் இருபாலரும் படித்துப் பயன்பெறுவதற்கு இதுவே நல்ல புத்தகம். கரும்புதின்னக் கூலியும் வேண்டுமா? இராமாயணம், அதிலேயும் பாதுபாடுசெய்து ஆசிரியர் பாரதியவர்கள் எழுதியுள்ளாரென்றால் அதிகம் சொல்லவும் வேண்டுமா? இதுவே தருணம்.

விலை அணா 10.

பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 8

முக்கிய அபிப்பிராயம்.

நவசக்தி:—“நீதிக் களஞ்சியமென்று கூறத்தகும் இராமாயணக் கதையை ஆசிரியர் இந்நூலில் சுருக்கமாகவும் ஆனால் அழகாகவும் கூறியிருக்கிறார். சிறு பிள்ளைகள் இந்நூலைப் படிப்பதனால் பல நன்மைகளை அடைவார்கள். சிறு பிள்ளைகளின் உபயோகத்திற்கென்றே இந்நூலை ஆசிரியர் எழுதினதாகத் தெரிகிறது.

நல்ல பிள்ளைக்கு இலக்கியமாக இராமனையும், நல்ல தம்பிக்கு இலக்கியமாக பரதனையும், நல்ல அடிமைக்கு இலக்கியமாக மாருதியையும் எடுத்து ஆண்டிருப்பது பெரிதும் போற்றத் தகுந்தது.”

---

விலாசம்:—மானேஜர், பாலவிநோதினி ஆபீசு,

இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.